கிழக்கு அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்ப வேண்டாம் சபையில் கோரிக்கை

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 04 இதழ் 123
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18 — 06 — 1993

(கொழும்பு)

கொழும்பில் அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் கிழக்கு மாகாண தமிழ் மக்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக மட்டக்களப்புக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்று திரு. தினேஷ் குணவர்த்தனா நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் சுமுகமான சூழ்நிலை உருவாகும் வரை தற்போது கொழும்பில்

(3-ம் பக்கம் பார்க்க)

'கடல்காற்று' ராணுவ நடவடிக்கை முடிவுற்றது

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட 'முஹது சுலங்' இராணுவ நடவடிக்கை முற்றுபெற்றுவிட்டதாக கூட்டுப் படை தலைமையகம் நேற்று அறிவித்தது.

மட்டக்களப்பில் வரகரை,

(4-ம் பக்கம் பார்க்க)

மன்னாரில் குடியிருப்புகள் மீது அகோர விமானத்தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம், முருங்கன் ஆகிய இடங்களில் மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று அகோர விமானக் குண்டுத் தாக்குதல்களை ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் இரு புக்காரா விமானங்கள் இரு குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

முருங்கன் மருதமடுப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இரு "மாசெற்றி" விமானங்கள் 4 குண்டுகளை மக்கள் குடியிருப்புகள்மீது வீசின.

பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்த இக்குண்டுகளிலிருந்து தப்புவதற்கு பாதுகாப்புத் தேடி மக்கள் பதுங்குகுழிகளுக்குள் பதுங்கிக் கொண்டனர்.

மீண்டும் இப்பகுதியில் முற்பகல் 10 மணியளவில் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

இராணுவ நடவடிக்கை ஆரம்பம் பிரிகேடியர் அங்கமன

(கொழும்பு)

மன்னார் - வவுனியா மாவட்டங்களில் பாதுகாப்புப்படையினர் புதிய தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன நேற்று தெரிவித்தார்.

எனினும் என்ன மாதிரியான தாக்குதல் நடவடிக்கைகள் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க பிரிகேடியர் அங்கம்மன மறுத்து விட்டார்.

எனினும் செட்டிகுளம் பகுதியிலிருந்து ஏனைய பகுதி

(3-ம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு

(கொழும்பு)

மன்னார்-வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத பிரதேசங்களில் நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் மறு அறுவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது.

புலிகள்தான் இப்போதும் எமக்கு உதவி வருகின்றனர்

யுத்தக்கைதி பேட்டி

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்றாவருட காலமாக எமக்கு உணவு மருந்து பொருட்கள் உட்பட சகல வசதிகளையும் ஏற்படுத்தி தந்த விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கும் மற்றும் அவ் அமைப்பைச் சேர்ந்த சகலருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். புலிகள்தான் இப்போதும் எமக்குகைகொடுத்து உதவுகின்றனர்.'

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் யுத்தக்கைதி

(3ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு தீர்வுகாண எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்

அமைச்சர் பண்டார வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் தொடரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான தீர்வொன்றைக் காண எதிர்க்கட்சிகள் முன்வரவேண்டும் என்று மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சந்திரா பண்டார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க

அவசரகாலச் சட்டம் தமிழரை துன்புறுத்த பயன்படுத்தப்படாது

அமைச்சர் விமல் உறுதி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழர்களைக் கைது செய்யதற்கோ துன்புறுத்துவதற்கோ அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என்று நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது அவசரகாலச்சட்டத்தைமேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பிரேணையை அமைச்சர்

(3-ம்பக்கம் பார்க்க)

★ ஹர்ஷத்மேத்தா விவகாரம்:

ராவ் - ஜனாதிபதி 45 நிமிடநேரம் சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவ் ஜனாதிபதி திரு. சங்கர் தயால் சர்மாவை நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

நேற்று ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற திரு. நரசிம்மராவ் சுமார் 45 நிமிடநேரம்

(4-ம் பக்கம் பார்க்க)

நெருக்கடி ஆராய்வு

(புதுடில்லி)

ஹர்ஷத் மேத்தாவின்குற்றச்சாட்டினால் ஏற்பட்ட நிலைமை குறித்து நேற்று நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் செயற்குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

புதுடில்லியில் பிரதமர் இல்லத்தில் இந்திரா காங்கிரஸ் தலைவரான திரு. பி. வி. நரசிம்மராவ் தலைமையில் இக்

(4-ம் பக்கம் பார்க்க)

ராவுக்கு இந்திரா காங்கிரஸ் பூரண ஆதரவு

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் பிரதமர் நரசிம்மராவை நேற்று சந்தித்து பிரதமருக்கு தமது பூரண ஒத்துழைப்பு நல்குவதாக உறுதியளித்

3 ம் பக்கம் பார்க்க)

பதவி விலகுமாறு வி. பி. சிங் கோரிக்கை

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உடனடியாக பதவி விலகவேண்டுமென முன்னாள் பிரதமர் வி. பி. சிங் கோரியுள்ளார்.

லக்னோவில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலே அவர் மேற்

(3-ம் பக்கம் பார்க்க)

என். டி. ராமராவ் ஜனாதிபதிக்கு நெருக்குதல்

(ஹைதராபாத்)

நாட்டின் மதிப்பையும், மரியாதையையும் காப்பாற்ற நரசிம்மராவ் அரசுமீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய ஜனாதிபதியை தேசிய முன்னணித் தலைவர் திரு. என். டி. ராமராவ் வற்புறுத்தியுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

யுத்தக்கைதிகளின்

72 உறவினர்கள் இன்றுயாழ்வருகை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 39 யுத்தகைதிகளையும்பார்வையிடுவதற்காக அவர்களின் உறவினர்கள் 72 பேர் நேற்று கொழும்பி

(3-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேகா புத்தக களஞ்சியம், 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3185)

10 அடி, 8 அடி நீளமான 2முதிரைக் கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. கிருஷ்ண பிள்ளை, இல. 29, சீனிவாசகம் ரோட், கொட்டடி. (கி-222)

தட்டச்சு (Typing)

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: "ஈழநாடு" விளம்பரப் பகுதி, யாழ்ப்பாணம். (எ- 3199)

PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-112)

புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

கிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 20-06-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவுசெய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-221)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (கி-231)

பிரயாணப் படி அதிகரிப்பு

(தாளையடி)

சமூக சேவை உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தினர் வறுமை நிவாரண ஆணையாளருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக 1993ம் ஆண்டு ஜனவரிமாதம்தொடக்கம் சமூக சேவை உத்தியோகத்தர்களின் பிரயாணப்படி ரூபா 850/ ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (163)

நூலகசேவை

(பருத்தித்துறை)

கரணவாய் ம்பிகை சன சமூக நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் நூலகசேவை அங்குரார்ப்பண விழாவும் நிலையத் தலைவர் திரு. க. புலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலால பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலகசேவைகளையும் ஆரம்பித்துவைத்தார். (52)

31ம் நாள் நெஞ்சவருடல்

மலர்வு
02-09-1970

உதிர்வு
20-05-1993

அமரர் சுப்பிரமணியம் ஸ்ரீபத்மநாபன்
(கண்ணன்)

ஆற்றல்மிக்க நண்பா குறுகியகாலம்
எங்களுடன் வாழ்ந்தாய்
கொடிய கூற்றுவன் உன்னுயிரைக்
குறிவைத்து விட்டானே
தேற்றுவார் யாருமின்றி தேம்பி
அழுகின்றோம் ஆற்றுவோம்
உன் பாதையில் அறப்பணி என்று
தேற்றுவோம் எம்மை தென்பாய் மாற்ற.

உன் நினைவு மறவாத
நண்பர்கள்.

பண்ணாகம். (கி-230)

31-ம் நாள் நினைவஞ்சலி

சுப்பிரமணியம் ஸ்ரீபத்மநாபன்

மலர்வு: 02-09-1970 உதிர்வு: 20-05-1993

பல்லக்கில் உனை ஏற்றிப் பரணி எல்லாம்
பவனி வர நாம் உனக்கு நாள் பார்க்க
பாடையிலே நீ ஏறிப் பரலோகம் பறந்து செல்ல
யார் உனக்கு நாள் பார்த்ததையா
அன்பின் வடிவே அறிவுச் சுடரே இன்பமாய்ப்
பேசி எவரையும் அணைப்பாய் உன்றன்
தாயும் சகோதரர்களுடனே பேர்த்தியும் இங்கு
பெரிய துன்பக் கடலில் மூழ்கிக் கண்ணீர்
சொரிந்தார் உடனுறை தோழரின் உண்மை
அன்பைத் திடமுடன் நீரும் தேடியே பெற்றீர்
தொழிலது நுட்பம் அறிந்தே செய்வாய் அரிய
துணையாய் அருகினில் அமர்ந்து பேர்த்தியின்
மனத்தை இன்புறச் செய்தாய் உந்தன் பிரிவு
உளத்தை வாட்டுதே என்றோ உன்றன்
இன்முகம் காண்போம் உமது ஆத்மா சாந்தி
அடைய எமது முருகனை ஏத்தினோம் நாம்

உமது பிரிவால் வாடும்:

பேர்த்தியார், தாய், சகோதரர்கள்,
மாமன், மச்சான், உற்றார், உறவினர்.

பண்ணாகம், சுழிபுரம்.
18-6-93. (கி-229)

உ

முதலாண்டு நினைவஞ்சலி

சிவனடி சேர்ந்த
அமரர் சி. சிவானந்தம் (B. Sc.)
(ஆசிரியர் திக்குவளை மிஃகாத் முஸ்லிம் ம. வி.)

தோற்றம்: 25-11-1951 மறைவு: 29-06-1992

அரனடி அமர்ந்து அமைதி பெறுகென மனையும்
மக்களும் மாதாபிதாவும் மற்றுமுள்ளோரும்
நினைவில் இருந்து நீர்வழி காட்ட இதயமலர்
சாத்தி இறைஞ்சுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
18-06-93. (கி-228)

இராசி பலன்

18-06-1993
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு ஆனி 4

சதுர்த்தி மு.ப 8-13 வரை, ரோகினி மு. ப. 10-41 வரை, இரங்குகாலம் காலை 8-54 முதல் 10-24 வரை, சுபநேரம் மாலை 2-54 முதல் 4-24 வரை, அமாவாசை விரதம்.

மேடம்: பிறர் ஏமாற்றம், அச்சம், தொழில் அலைச்சல்.

இடபம்: சத்துருக்கள்லாபம் காரிய வெற்றி, சந்திப்பு.

மிதுனம்: குடும்பச்கஷ்டம், கட்டுப்படுதல், இனசனபகை.

கடகம்: விவாகப் பேச்சுக்கள், தொழில் சிறப்பு, உல்லாசம்.

சிங்கம்; காரிய வெற்றி, கலந்துரையாடல், தானதர்மம்.

கன்னி: பெண்களால் துன்பம், பிறர்கோள், வெறுப்பு.

துலாம்: குடும்பச் சச்சரவு, முன்கோபம், களைப்பு.

விருச்சிகம். வியாதிசோகம், அதிக கவலை, பணமுடை.

தனுசு: நல்லோர்சேர்க்கை, செலவு, கௌரவம்.

மகரம்: வேலைக்கஷ்டம், விதண்டாவாதம், மனப்பயம்.

கும்பம்: புத்தளடுமாற்றம் பெற்றோர் நிந்தனை, தொழில் நஷ்டம்.

மீனம்; புதியபணி, உறவினர் மகிழ்ச்சி, அதிகாரம்.

ஜோஸ்வர்

உடன் தேவை

விரையுங்கள்

நல்ல விலைக்கு வாங்கப்படும்
உங்களின் பழைய மெத்தைகள், குசன் துண்டுகள், குசன் வகை (சகல அளவுகளிலும்)
உடன் பணத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.
நேரிலும் வந்து வாங்கப்படும்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

முகவரி:
இல. 166, 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் பாடசாலை முன்பாக)
(கி-232)

VACANCY

POST OF TYPIST / SECRETARY

Applications are invited from females residing within 4 Miles from Jaffna Town.

Qualifications

(i) Below 30 years.
(ii) G. C. E. (A/L) with credit pass in Mathematics / Arithmetic.
(iii) English Typing Speed 30 W. P. M.

A Knowledge of English and Accounts will be considered additional qualifications.

Apply on or before 25-th June 1993 to

Personnel Officer,
TASTE LINE INDUSTRIES (PVT) Ltd.
14, Seenier Lane.
Jaffna.

(A-3200)

1-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

திருமதி மகேஸ்வரி அம்மா சிவராசா
(குரும்பசிட்டி)

மலர்வு: 25-4-1944 உதிர்வு: 29-6-1992

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் கிகரமாய் வாழ்ந்த பொன்னுருவே! எங்கள் வாழ்க்கையை உயர்த்திய அன்புத் தெய்வமே. எப்படி வாழணும் என வழி காட்டிய சுடரொளியே! நீங்கள் எங்கு சென்றிடினும் உங்களின் நீங்காத நினைவுகள் எங்களுடன் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

உருகிடும் கண்ணீரோடு உங்கள் ஆத்மா சாந்திடையப் பிரார்த்திக்கும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(கி-235)

ராவ் மீதான லஞ்சக் குற்றச்சாட்டினால் இந்தியாவில் அதிர்ச்சியும் பரபரப்பும்!

பங்கு மார்க்கட் ஊழல் குற்றச்சாட்டின் முதன்மைக் குற்றவாளியான ஹர்ஷத் மேத்தா தான் ஒரு கோடி ரூபாவைப் பிரதமர் நரசிம்ம ராவுக்கு லஞ்சம் கொடுத்ததாகத் தெரிவித்த தகவல் இந்தியாவில் பெரும் பூசலையும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை அசைக்கமுடியாதிருந்த அக்காலத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, போபர்ஸ் பீரங்கிக் கொள்வனவில் லஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டதை அடுத்து காங்கிரஸ் கட்சியின் ஆட்சி ஆட்டங்கண்டு பதவியிழந்தது. புகழின் உச்சியிலிருந்த ராஜீவ் தான் நிரபராதியென்று நிரூபிக்க முடியாமற் போயிற்று.

இந்தக் குற்றச்சாட்டை முக்கிய ஆதாரமாக வைத்து சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்ட திரு. வி. பி. சிங் ஆட்சியை அப்போது கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹர்ஷத் மேத்தாவின் குற்றச்சாட்டை ஒரேயடியாகவும் முற்றுமுழுதாகவும் மறுத்துள்ள பிரதமர் நரசிம்ம ராவ் தற்போது அரசியல் வானில் எப்படியும் தலைகுனிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

"போபர்ஸ்" காந்தியென ராஜீவைக் கேலி செய்தது போல 'ஹர்ஷத் மேத்தா ராவ்' என்று இவரையும் கேலி செய்யவே செய்வார்கள்.

திரு. ராவ் மீதான குற்றச்சாட்டு பாரதீய ஜனதாக் கட்சி போன்ற எதிர்க்கட்சிகளுக்கு கற்கண்டை வாயில் போட்டது போலாகிவிட்டது. அதேவேளை காங்கிரஸ் கட்சியினர்க்கு வேப்பம் எண்ணையை வாயில் விட்டது போல் இருக்கிறது.

ஹர்ஷத் மேத்தா சாதாரண மனிதர் அல்ல. 5 ஆயிரம் கோடி ரூபா பங்கு மார்க்கட் ஊழலில் குற்றஞ்சாட்டப்பட்ட முதன்மைக் குற்றவாளி. தான் தப்பிக் கொள்வதற்காகவும், எதிரணியினரின் ஆதரவைப் பெறவும், இந்தியாவின் பொருளாதார ஸ்திரத்தைக் குலைக்கவும் இப்படியான குற்றச்சாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளார் என கிளர் வர்ணிக்கிறார்கள்.

ஆனால் நண்டியால் இடைத் தேர்தலின்போது ஒரு கோடி ரூபாவை நேரடியாக ராவின் வீட்டில் காசாகக் கொடுத்ததாகக் கூறியிருப்பது நெருப்பின்றி புகை வராதே என்று மற்றும் கிளர் கருதுகிறார்கள்.

தேர்தல் காலங்களில் பெரும் தொகைப் பணம் அரசியல் வாதிகட்கு தேவைப்படுவது உண்மையே. அதை இடதுகையால் வேண்டி வலது கையால் கொடுத்து தேர்தலில் வெற்றிவாகை சூடுவது அரசியல் வாதிகட்கு கைவந்த கலை, ஆனால் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஒருவர் இப்படியும் நடந்தால், அவரின் கீழ் இருப்பவர்கள் மடைதிறந்த வெள்ளம்போல் ஊழலில் ஈடுபடத் தொடங்கி விடுவார்கள். இதனாலே தான் தலைவர் குற்றவாளியானால் ஆட்சியே உடன் கவிழ்ந்து விடுகிறது.

இதேவேளை ஹர்ஷத் மேத்தா இப்படியாக பணம் கொடுத்தாரா அல்லது திரு. ராத் அதைபெற்றாரா என்பது அதுஅல்ல விடயம். தான் ஒரு சலுகையை பெற ஒரு அரசியல்வாதிக்கு ஒரு கோடி ரூபா பணம் கொடுத்து தன் பேரத்தை நிறைவேற்றிய குற்றத்தில் இப்போது மேத்தா அகப்பட்டுக் கொண்டார்.

இவரை விசாரித்து வரும் சி. பி. ஐ யினரும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவினரும் 'லஞ்சம் வழங்கிய' குற்றச்சாட்டுக்காக உள்ளேதள்ள உள்ளனர். இதுகாலவரை நடந்த விசாரணைகளில் இவர் உண்மை சொல்லாமல் இருந்துவிட்டு இப்போது கூறுவது உண்மைக்கு புறம்பானதாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

காங்கிரஸ் கட்சிக்கு தலைவரைத்தேடி அலைந்த ஆட்சியாளர், தங்கள் தற்போதய தலைவர் மேலுள்ள கறையை போக்கஅரும் பாடுபடவே செய்வர். எனினும் பி.ஜே.பி. போன்ற எதிரணியினர்க்கு எதிர்ப் பிரசாரத்திற்கு ஒரு தரும்பு கிடைத்து விட்டது. திரு. நரசிம்மராவ் தன் நிலையை ஸ்திரப்படுத்தவும் தான் நிரபராதி என நிரூபிக்கவும் பெரும் பாடுபட வேண்டிவரும். (வே-ரி)

இன்று

(யாழ்ப்பாணம்)

வேலணை சைவப்பிரகாச வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் யாழ். புனித மரியாள் வித்தியாலய (ஓ. எல். ஆர்.) மைதானத்தில் நடைபெறும். (சு)

0 0 0

(அரியாலை)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் இசைவிழா இன்று 18-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 20-ம் திகதி ஞாயிறு வரை மூன்று தினங்களுக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (59)

0 0 0

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய தேர்த்திருவிழா இன்று 18-ம் திகதி வெள்ளி பகல் 10-15 மணிக்கு இடம் பெறும். (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு கி. கி. த. க. பாடசாலை பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் இரா. திருஞானசுந்தரத்தின் பண்ணிசை. மெல்லிசை என்ற நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. விழாவுக்கு மு. ச கி. தேவராசா தலைமை வகிக்கின்றார். (சு)

0 0 0

(கொழும்புத்துறை)

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 18-ம் திகதி வெள்ளிக்கிழமையும், நாளை 19-ம் திகதி சனிக்கிழமையும் காலை 8-30 மணிக்கு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் இடம்பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்க்கட்டு சனசமூகநிலைய 18-வது ஆண்டு விழா நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக திரு. என். வித்தியாதரனும் சிறப்பு விருந்தினராக அரியாலை பிரதேச பொறுப்பாளர் திரு. பா. மாவியும் கலந்துகொள்கிறார்கள். (ரி)

அவசரகாலச் சட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமல் விக்கிரசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசுகையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும்போது கூறியதவேது: கடந்த மாதத்தில் விடுதலைப் புலிகளினதும், ஏனைய பயங்கரவாதிகளினதும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை நீக்கிவைப்பதற்கு அவசர காலச்சட்டம் நீடிக்கப்படவிருக்கிறது. அரசியல் லாபம் பெறுவதற்காக அவசர காலச்சட்டத்தை அரசாங்கம் ஒருபோதும் பயன்படுத்தியது கிடையாது.

எதிர்காலத்திலும் இதே நிலையைக் கடைப்பிடிப்பதற்கு அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது கொழும்பிலுள்ள தமிழரை கைதுசெய்வதற்கு அவசர காலச்சட்டம் ஒருபோதும் பயன்படுத்தப்படமாட்டாது.

பொலிசார் பின்பற்றவேண்டிய நடைமுறை குறித்து அவர்களுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தற்போது எந்த வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. தமிழ்மக்களை அரசாங்கமோ பாதுகாப்புப் படையினரோ துன்புறுத்துகிறார்கள் என்பதனை சர்வதேச அவதானிகளோ நீதிபதிகளோ வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

அவசரகாலச் சட்டத்தின் சில விதிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையும் ஏனையவை தளர்த்தப்பட்டுள்ளமையும் கூடியவிரைவில் அவசர காலச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளது என்பதைக் காட்டுகின்றன என்றும் அவர்மேலும் கூறினார்.

அவசரகால நீடிப்பு பிரேரணை 67 அதிகப்படியான வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்றுநிறைவேற்றப்பட்டது. (ரி-வி)

இனப்பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி தீவிரவாதத்தை ஒழிப்பதற்கே செலவு செய்யப்படுவதால் அரசியல் லாபம் சம்பாதிப்பதைக் கைவிட்டு யுத்தத்தை முடிவுக்குகொண்டுவர எதிர்க் கட்சியினர் முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் அங்கு பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

இனப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு முன்னுரிமை அளித்துவரும் ஜனாதிபதிக்கு சகல எதிர்க்கட்சித் தலைவர்களும் முழுமனதுடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கைத்தறி புடைத் தொழிற்துறை அமைச்சர் எம். ஏ. அப்துல் மஜித் தனது உரையின் போது கேட்டுக் கொண்டார். (ரி)

விவசாய பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலே கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக வட்டவை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான விவசாய பயிற்சி வகுப்பொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடாத்தப்பட்டு வந்தது.

பயிற்சி வகுப்பு தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெற்று பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 9-ம் திகதி பயிற்சிப் பாடசாலை அதிபர் திருமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

பயிற்சி வகுப்பில் தாம் பெற்ற அறிவினை சுயசார்புப் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தும்படி பயிற்சியாளர்களை பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுக்கொண்டார்.

ஆங்கில பரீட்சை விபரங்கள்

(பருத்தித்துறை)

தேசிய தராதரப்பத்திர ஆங்கில பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அரசாங்க அறிவித்தல்களின் விபரங்கள் பொதுமக்கள் பார்வைக்காக பருத்தித்துறை பிரதேசசபை புலோலி பொதுசன நூலகத்தில் வைக்கப்பட்டிருப்பதாக பொதுநூலக பிரதம நூலகர் திரு ஏ என். எஸ் திருச்செல்வம் அறிவித்துள்ளார். 'ஈழநாடு' அலுவலகத்திலும் இதனை பார்வையிடலாம். இத்தேசிய தராதர ஆங்கில பரீட்சைக்கு இம்மாதம் 29ம் திகதி வரை வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் விண்ணப்பிக்கலாமென்றும் பரீட்சை அடுத்த மாதம் 31ம் திகதி யாழ்ப்பாணத்திலும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஒடயம்பதி ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறும்.

புலிகள்தான்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுள் ஒருவரான அம்பாறை உலுணுசேவையை சேர்ந்த டி. எம். சுனில் 'புலிகளின்குரல்' வானொலிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

களுத்துறை மிதலவெனவைச் சேர்ந்த 30 வயதான அமரசிறி இந்தப்பேட்டியில் தெரிவித்ததாவது: எங்களால் இப்போது எழுந்திருக்கமுடியவில்லை என்றாலும் இன்னும் இரு தினங்களில் நீராகாரம் அருந்துவதை நிறுத்திவிடுவோம். எமது உயிரைப் பற்றி தீர்மானிக்க இன்னும் இரு தினங்களேயுள்ளன.

எமது உயிர்கள் 39ஐயும் காப்பாற்றும்படி அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் நாம் வேண்டுகோள்விடுக்கின்றோம்.

எம்மால் இவற்றைக் கடன் கழிக்கவோ வேறு தேவைகளுக்கோ செல்லமுடியாதுள்ளது. எமது தாய், தந்தையரை சந்திக்க எம்மால் முடியுமோ தெரியாது என்றும் தெரிவித்தார்.

சரசமந்த என்னும் பொலிசார் தெரிவிக்கையில், எமது தாய், தந்தையர் வரும்போது அவர்களுடைய முகத்தைஎம்மால் பார்க்கமுடிமோ என்று எனக்குத் தெரியாது. என்னுடைய உடல்நிலை மோசமாகிவிட்டது என்றார். (க)

யுத்தக் கைதிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டனர்.

இவர்கள் நேற்று கொழும்பிலிருந்து விசேட பஸ் வண்டிகள் மூலம் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து நரோமா என்ற கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தைச் சென்றடைவார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்நகர் செல்லும் மேற்படி கைதிகளின் உறவினர்கள் இன்று பிற்பகல் யாழ்நகரைச் சென்றடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாட்கள் மட்டும் யாழ். நகரில் தங்கியிருக்கும் இவர்கள் 20-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை மீண்டும் கொழும்பு திரும்புவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. —வி-157

எம். டி. ராமராவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹைதராபாத்தில் நேற்று செய்தியாளர்களிடையே பேசிய திரு ராமராவ், ஹர்ஷத் மேத்தா குற்றச்சாட்டை அடுத்து திரு நரசிம்மராவ் தமது அரசின் இராஜினாமாவைக் கொடுத்திருக்கவேண்டும் என்று கூறினார். (ரி)

ராவுக்கு இந்திரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

இதேவேளையில் பிரதமர் நரசிம்மராவ் மீது ஹர்ஷத் மேத்தா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கூட்டுநாடாளுமன்றக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் என கமிட்டியின் தலைவர் ராம் மிலாஸ் மிர்தா தெரிவித்துள்ளார். (க)

பதவி விலகுமாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஹர்ஷத் மேத்தாவின் குற்றச்சாட்டு கடுமையானது என குறிப்பிட்ட அவர் இது குறித்து பிரதமர் நாட்டு மக்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்கவேண்டுமென்றும் இக்குற்றச்சாட்டை மறுப்பதுமட்டும் போதுமானதல்லவென்றும் தெரிவித்துள்ளார்.

இடதுசாரிக்கட்சிகள் உட்பட பல கட்சிகள் பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டுமெனக்கேட்டுள்ளனர்) (க.

இராணுவ நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு முன்னேறுவதற்கான நடவடிக்கைகளிலேயே இராணுவம் ஈடுபடவுள்ளதாக வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. —இ

கிழக்கு

1ம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் மக்களை கட்டாயப்படுத்தி அங்கு திருப்பி அனுப்ப வேண்டாம்.

இவ்விடயத்தில் அரசு தனது அரசியல் லாபத்தை கைவிட்டு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்று திரு. தினேஷ் குணவர்த்தனா மேலும் கூறினார்

திரு. தினேஷ் குணவர்த்தனாவின் கூற்றை ஆமோதித்து பல தமிழ் எம். பிக்களும் உரையாற்றினார்கள். (வி)

ஜேர்மன் தீவிரவாத குழுக்கள் வெளிநாட்டவரை தாக்கினால் கடும் நடவடிக்கை

-அதிபர் கோல் எச்சரிக்கை

(பொன்)

ஜேர்மனியில் உள்ள வெளி நாட்டவர்களை தாக்கிவரும் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜேர்மன் அதிபர் திரு. ஹெல்மட்கோல் கூறியிருக்கின்றார்.

ஜேர்மனியில் உள்ள வெளி நாட்டவர்களை அகற்றுவதே தீவிரவாதக் குழுக்களின் நோக்கம் என்பதை குறிப்பிட்டுள்ள அதிபர் கோல் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும்முகமாகவே ஜேர்மன் அதிபர் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜேர்மனியில் உள்ள தீவிரவாதக் குழுக்களின் தாக்குதல்கள் சம்பந்தமாக பேச்சுக்கள் நடாத்துவதற்காக ஜேர்மனியில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களின் பிரதிநிதிகளும் அதிபர் ஹெல்மட் கோலும் அடுத்தவாரம் பேச்சுக்கள் நடாத்த இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

கிழக்கில் புலிகள் கட்டுப்படுத்தப்பட்டனராம்

(தொழுதுப்பு)

கிழக்கு மாகாணத்தில் இன்னும் மூன்று மாதங்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அதிகமன நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை நாம் தற்போது முற்றாகக் கட்டுப்படுத்தி விட்டோம். ஆகவே இனிமேல் கிழக்கு மாகாணப் பகுதியில் தேர்தல்கள் அரச நடாத்தும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாக என்றும் பிரிகேடியர் மேலும் தெரிவித்தார். —வி

சிமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஏப்பரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் சுன்னாகத்தில் உள்ள தலைமைக் காரியாலய அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கூ. சங்கங்கள் சனி, ஞாயிறு இறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

மானிய உதவு, வருமான நிவாரணம், இடம் பெயர்ந்தோர் நிவாரணம் மற்றும் உணவுப் பொருட்களின் விநியோகத்தைத் தவிர்ப்பதற்காக சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் முழுமையாகத் திறந்து காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (157)

300 தபால் பொதிகளுடன் குமண இன்று வருகிறது

திருநெல்வேலி)

குமண தபால் இன்று வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறை தபாற்நிலையத்தை வந்து சேரும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 300 தபால் பொதிகளுடன் 3200 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் எடுத்துவரப்படுகின்றன.

ராஜீவ் கொலைவழக்கு: பொட்டு அம்மான் ஒரு கற்பனை மாத்திரம்

எதிர் தரப்பு வழக்கறிஞர்

(சென்னை)

"விடுதலைப் புலிகளின் உளவுப்படைத் தலைவர் பொட்டு அம்மானும், பெண்கள் அணியின் தலைவி அகிலாவும் தலைமறைவானவர்கள். இவர்கள் இருவரும் கற்பனையான பாத்திரங்களே"

பூந்தமல்லியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இடம் பெற்ற ராஜிவ் கொலைவழக்கு விசாரணையின்போது வாதிட்ட எதிர்தரப்பு சட்டத்தரணி துரைசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், அவர்கள் உண்மையில் வாழ்பவர்கள் என்பதைக் காட்டும் சான்றுகள் எவற்றையும் அரசு தரப்பினர் குற்றப் பத்திரிகையிலோ, நீதி மன்றத்தில் முன்வைத்த ஆவணங்களிலோ எச்சந்தர்ப்பத்திலும் காட்டவில்லையென்று அவர் வாதிட்டார். (க)

தமிழகத்தில் தலைமறைவாக உள்ளார்?

(தொழுதுப்பு)

முன்னாள் பிரதமர் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உட்பட சம்பவ தமிழ்நாட்டில் தலைமறைவாக இருப்பதாக வெளித்தாஸ் வானொலி நேற்று தனது செய்திகளில் தெரிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, தேர்தல்களில் பெரும் மோசடிகளை செய்தவர் என்றும், அவர் தனிநாக தற்கொலைப்படை ஒன்றை நடாத்தி வந்துள்ளார் என்றும் குற்றம் சாட்டியதன்பேரில் அவரைக் கைது செய்ய அரசு முற்பட்ட சமயம் திரு. உட்பட சம்பவ தலைமறைவாகி இருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை கொலை மானத்தை ஜனாதி ஏ. பி. விஜயதுங்க ஏற்பட்ட இரகசிய தொடர்பு அடுத்து திரு. உட்பட விரைவில் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் வெளித்தாஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. —வி

மன்னாரில் குடியிருப்புகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரசெற்றி விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியதில் மூன்று துவிச்சக்கர வண்டிகள் சேதமடைந்தன.

மன்னாரில் நேற்று முன்தினம் குண்டுத்தாக்குதல் கள் இடம்பெற்றுள்ளது தெரிந்ததே. —க

ராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவுடன் உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் விபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படாத போதும் ஹர்ஷத்மேத்தாவின் குற்றச்சாட்டு தொடர்பாகவே இவர்கள் கலந்துரையாடியதாக தெரியவருகிறது. (ரி)

கடல் காற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கதிரவெளி, காயங்கேணி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் இவ்இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது தெரிந்ததே. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் சார்பாக சாவகச்சேரி மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B

லலித்தை கொலை செய்தனர் ரகுநாதன் என ஊர்ஜிதம்

பொலிஸ் அதிகாரி தகவல்

(தொழுதுப்பு)

கொழும்பு முகலை வீதியில் இறந்து கிடக்கக்காணப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த ரகுநாதனே முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியை கொலை செய்தார் என்பதை குற்றப்புலனாய்வுப்பகுதி உதவியோடு தாம் ஊர்ஜிதப் படுத்தியுள்ளதாக இரகசிய பொலிஸ் பிரதி பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற சட்டிடத்தில் நடைபெற்ற வாரத்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அதேவேளை இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இக்கொலை விவகாரத்தில் வேறுயாரேனும் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பதுதொடர்பாகவும் புலனாய்வுப்பகுதியினர் ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பாக இரு சந்தேக நபர்களை தேடப்பட்டுவருகின்றனர். இவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுவிட்டார்.

இதுவரையில் 9 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். திரு. ரகுநாதன் 1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் கொழும்பில் வசித்துவந்தார். கொட்டாஞ்சேனையில் உள்ள வீடொன்றிலும் அவர் நிலையத்திலும் அவர் கடமை புரிந்துவந்தவர்களாரும் என்பதும் ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளது எனவும்கூறினர்.

எவரது விற்புறுத்தலிலும் நாம் உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலினாலேயே நாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக தென்பகுதியில் கூறப்படுவது உண்மைக்கு மாறானது"

இவ்வாறு உண்ணாவிரதமிருக்கும் யுத்தகைதிகளின் "புலிகளின் குரல்" வானொலிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவையில், தாம் எவரது வற்புறுத்தலுக்கு இணங்கி உண்ணாவிரதம் மேற்கொள்வதில்லை என்றும் தாமாகவே ஸ்ரீலங்கா அரசிடம் தம்மை விடுதலைசெய்யுமாறு கோரி உண்ணாவிரதம் மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர். —க

தமிழர் உண்ணாவிரதம் பொலிஸார் ஊர்ஜிதம்

(தொழுதுப்பு)

கொழும்பிலுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் 190 பேர் தற்போது உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாக பொலிசார் நேற்று ஊர்ஜிதம் செய்தனர்.

நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களின் தம்மீது உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கும்படி அரசிடம் பல தடவை எடுத்துக் கூறியும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததை ஆட்சேபித்தே இந்த உண்ணாவிரதத்தை தமிழ் இளைஞர்கள் ஆரம்பித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

பிரதமர் ராவ் பதவி விலகதேவையில்லை

(சென்னை)

மறுவாழ்வு மற்றும் இல எதிர்க்கட்சிகளின் சதிகாரண மாகவே பங்குதாரர் திரு. ஹர்ஷத் மேத்தா பிரதமர் மீது பழி சுமத்தியுள்ளார் என்றும் இதற்காக திரு. நரசிம்மராவ் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லையென்றும் எம். ஜி. ஆர். அ. தி. மு. க. தெரிவித்துள்ளது.

இக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. திருநாவுக்கரசு நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பிரதமர் பதவி விலகவேண்டும் என்று சில எதிர்க்கட்சிகள் கூறியிருப்பது அரசியல் மோசடித் தனமெனக் கண்டித்துள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் முன்பும் மத்திய புலனாய்வுத்துறையினரிடமும் இது பற்றிக் கூறுக திரு மேத்தா இப்போது பிரதமர் மீது பழி சுமத்துவது நடுநிலையாளர்கள் நம்பும்படியாக இல்லை.

இச்சூழ்நிலையில் திரு. நரசிம்மராவ் பதவி விலகுவது நாட்டில் மிதவாத சக்திகளின் கை ஓங்குவதற்கு வழி செய்வதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

கொழும்பில்விடுதலையாகும் தமிழ் இளைஞரிடமிருந்து பொலிஸார் பணம் பறிப்பு

(தொழுதுப்பு)

கொழும்பில் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களை விசாரணையின் பின் பொலிஸார் விடுதலைசெய்யும்போது அவர்களிடமிருந்து தலா 1500 ரூபாவை இரகசியமாக அறவிடுவதாக நாடாளுமன்றத்தில் நேற்று மலையக எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

பொலிசார் தமிழ் இளைஞர்களை கைதுசெய்தபின் அவர்கள் நிரபராதிகள் என்று ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட பின்பு அவர்கள் விடுதலைசெய்யப்பட்டதும், அவர்களிடம் இருந்து பொலிசார் இரகசியமாக 1500ரூபாவை அறவிடுவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை 60இலும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தலா 1500ரூபா வீதம் பொலிசாருக்கு கொடுத்துள்ளார்கள் என்றும் அந்த எம். பி. மேலும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (வி)

நெருக்கடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிடக் நடைபெற்றது.

அதனுடன் முதல்வர் திரு. வீரப்ப மொய்லி, குஜராத் முதல்வர் திரு. சிமன்பாய் பட்டேல் உட்பட பலவேறு மாநில முதலமைச்சர்களும் இக்கூடிடத்தில் கலந்துகொண்டனர்.

இந்திராகாங்கிரஸ்நாடாளுமன்ற உறுப்பினர்களும், மத்திய அமைச்சர்களும் நேற்று மாலை புதுடில்லியில் கூடி இது தொடர்பாக கலந்துரையாடினர். (ரி)

இராணுவம் குவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் வடபகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் பரீட்சை இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியின் முன்னோடி நடவடிக்கையே மேற்படி படை குவிப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது. —க